**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**K.சந்திரசேகரன்** — **தலைவர்**

**R.சந்திரசேகரன்.** — **பொதுச்செயலாளர்**

**சுற்றறிக்கை எண் 12 / 2017** **27-07-2017**

அன்புடையீர்,

வணக்கம். தொழிற்சங்கங்களின் கோரிக்கையை ஏற்று வாரிய உத்திரவு எண்.8, நாள்.23.01.2014-ன்படி அட்டைப்பட்டியல் பணித்தொகுப்பில் விநியோக வட்ட மத்திய அலுவலகத்திற்கு ஒன்று வீதம், மொத்தம் 42 கணக்கீட்டு அலுவலர் பொறுப்புகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

துவக்கமாக கோட்டத்தில் கணக்கீட்டு அலுவலர்களின் பணிகளையே வட்ட அளவில் அவர்கள் கவனிப்பார்கள் என்று கூறப்பட்டிருந்தாலும், தலைமை நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் அவர்களின் 25.6.2014 மற்றும் 9.9.2015 கடிதங்கள் வாயிலாக அவர்களுக்கென்று தனியாக கடமைகளும், பொறுப்புகளும் வரையறுக்கப்பட்டு உத்திரவுகளாக வழங்கப்பட்டன.

இந்நிலையில் அவர்களது பணிகள் திருப்திகரமாக இல்லையென்று தலைமை அலுவலகங்களுக்கு வரப்பெற்ற அறிக்கைகள் வாயிலாக அறிய வந்ததாகக் கூறி , மீண்டும் அவர்களது கடமைகளையும்,பொறுப்புகளையும் வரையறுத்து 12.7.2017-ல் ஒரு உத்திரவு வெளியிடப்பட்டது.

அதில் ஒரே பணிகள் திரும்பத் திரும்ப கூறப்பட்டிருந்ததையும், தேவையற்ற பணிகள் வரையறுக்கப்பட்டிருந்ததையும், அலுவலர்களை அச்சுறுத்தும் வகையில் சில வாசகங்கள் இருப்பதையும் கவனித்த நாம், இயக்குனர் / நிதி (பொறுப்பு) அவர்களிடம் 21.7.2017 அன்று எடுத்துக்கூறி, உத்திரவில் தேவைப்படும் திருத்தங்களை மேற்கொள்ள வலியுறுத்தியுள்ளோம். ( கடிதம் இணைக்கப்பட்டுள்ளது )

➢ இளநிலை உதவியாளர் (கணக்கு) மற்றும் (நிர்வாகம்) நியமனத்திற்கு கல்வித்தகுதி எஸ்.எஸ்.எல்.சி என்பதை பட்டப்படிப்பாக 24.5.2014-ல் வாரியம் தன்னிச்சையாக மாற்றியதை எதிர்த்தும், உள்முகத் தேர்வுப் பிரச்சனை நிலுவையில் இருக்கும் போதுஇளநிலை உதவியாளர் (கணக்கு) 250 பேர் (நிர்வாகம்) 100 பேர் நேரடித் தேர்வு செய்வதை எதிர்த்தும் 2 வழக்குகள் நமது சங்கத்தால் தொடரப்பட்டு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தடை பெற்றுள்ளதை தாங்கள் அறிவீர்கள். கல்வித் தகுதி மாற்றத்தினை எதிர்த்து நமது சங்கம் இடைக்கால தடை உத்திரவு பெற்ற வழக்கு (19516/2015 ) 26.07.2017 அன்று விசாரணைக்கு வந்து பின்னர் 3 வாரங்களுக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வாரியம் தனது 15.7.2017 உத்திரவு வாயிலாக புதிதாக 250 பேர் இளநிலை உதவியாளர் (கணக்கு) பொறுப்புக்கு நேரடித் தேர்வு செய்யப் போவதாக அறிவித்துள்ளது.

இது முற்றிலும் நியாயமற்றது என்பதாலும், நீதிமன்ற அவமதிப்பு என்று கருதுவதாலும் நேரடி தேர்வு செய்யும் தனது நடவடிக்கையை நிறுத்தும்படி வாரியத்திற்கு நமது வழக்கறிஞர் கடிதம் அனுப்பியுள்ளார்.

➢ ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு E.P.F. பிடித்தம் செய்வது சம்மந்தமான வழக்கில் ஒரு சங்கம் கொடுத்த பட்டியலில் உள்ளவர்களுக்கு மட்டுமே பென்சன் கிடைக்கும் என்று கூறுவதை யாரும் பொருட்படுத்தத் தேவையில்லை. நமது சங்கம் ஏற்கனவே சுற்றறிக்கை எண்.12, நாள்.28.10.2015, சுற்றறிக்கை எண்.15, நாள்.27.11.2015, மற்றும் சுற்றறிக்கை எண்.5, நாள். 22.4.2016-ல் தெரிவித்தபடி 1.4.20003-க்கு முன்பு மின்வாரியத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணிபுரிந்ததன் அடிப்படையில் 1.4.2003-க்குப் பிறகு நிரந்தரம் பெற்றுள்ள தொழிலாளர்கள் அனைவரும் பென்சன் பெறுவதற்கு உரிமை படைத்தவர்கள். அந்த உரிமையைப் பெற்றுத் தர மின்வாரியத் தொழிற்சங்கங்கள் நிச்சயம் முயற்சி எடுக்கும். அதில் நமது சங்கம் முன்னிலையில் நிற்கும். யாரும் கவலைப்படத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

➢ திருமணமான பெண்களுக்கும் கருணை அடிப்படையில் வாரிசு வேலை வழங்கிட வாரியம் 25.7.2017-ல் உத்திரவிட்டுள்ளது. ( உத்திரவின் நகல் இணைக்கப்பட்டுள்ளது)

2017-ம் ஆண்டிற்கான சந்தாத்தொகையினை விரைவில் அனுப்பிடவேண்டுகிறோம்.

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர்.
கிளைச்செயலாளர்கள், கோட்டச்செயலாளர்கள், உதவி கோட்டச்செயலாளர்கள்,
வட்டச்செயலாளர்கள், வட்டத்தலைவர்கள்,மண்டலச்செயலாளர்கள்,
மற்றும் மத்திய சங்கப்பொறுப்பாளர்கள்.
நகல் : செய்தி மடல்.

To 21.07.2017

The Director Finance,
TANGEDCO,
Chennai – 2

Sir,

Sub : TANGEDCO – Duties and Responsibilities of ATO's – Reg.

Ref : 1) (Per) FB TANGEDCO Proceedings No.8, dt.23.01.2014.
2) Lr.No.CFC/FC/R/AO/Rev/D /2014 Date.25.06.2014
3) Lr.No.CFC/R/EA/D. / 2015, dt.09.09.2015
4) Lr.No.CFC/REV/FC/REV/AO/REV/F.Rev.Aug./ D.508/17 dt.12.07.2017.

********

Based on the demand of the Unions, the Board was kind enough to create 42 posts of Assessment Officers in the Distribution Circle Offices of TANGEDCO, under B.P.No.8 dt.23.01.2014.

It has been stated in the order that the above newly created ATOs shall look after the works relating to the Circles concerned as in the case of existing ATOs in the Division Office.

When the works have been fixed as above, the Accounts Branch has chosen to issue an order dt.25.06.2014 containing a lengthy list of duties and responsibilities to be adhered by them strictly.

But,stating that the above duties and responsibilities were not carried out to the satisfaction of the Head Quarters, the CFC/Revenue has again and again reiterated the same orders twice in Memos dt.9.9.2015 and 12.7.2017.

We feel the instructions issued appear to be complicated, confusing and intimidating. We are afraid that even this latest order also may not bring any desired result, unless the instructions are simplified in consultation with unions.

On our side, we would like to suggest as follows:-

(1)The duties and responsibilities mentioned under item no.1 & 8 are one and the same. Hence we request the item no.8 may be deleted.

(2) Similarly we find some repetition of duties mentioned in item No.1 & the General instructions issued under item (c).
The sentence "Checking should be made on the works of Assessor/ Inspector of Assessment and Revenue Supervisor so as to ensure no leakage of revenue in that section" is redundant.
Further, this duty as mentioned, is only vague and not specific. Hence this may be deleted.

(3) Item No.2 & 13 are similar. Hence, item 13 may be included Along with item No.2.

(4) Since the computer will accept payment only by D.D or Cash in respect of dishonoured cheque cases. Item no.9 may suitabily modified.

The duties of the ATO may be sub-divided into 3 areas as follows;-

(1)Central Office, (2) Section Office, (3) Meter point.

The works to be done at

**Central Office.**

1) Attending the consumer complaints regarding Assessment & Collection.
2) Attending the Correspondences.
3) Watching rotation of collection staff made in the section with reference to reports received.
4) To watch and ensure disconnection, except Government and Local Bodies.
5) Watching the collection of dishonoured cheques with penal charge
6) Verification of correctness of Assessment / collection with reference to computer.
7) Arranging for inclusion of short levy in the next bi-monthly Assessments.

**Section Office** :-

1. Verification of prompt remittance.
2. Ensure safe custody of balance cash.
3. Verification of Meter defective Register.
4. Ensure quick replacement of meters.
5. Ensure, remittance challan and collection records sent to Revenue Branches in time.
6. Verification of proper application of Tariff in LTCT service, MF and compensation charges.

**Meter point**:-

1. Random checking of meter readings with reference to white meter card and computer.
2. Test check few disconnected services.
3. Test check the correctness of assessment in Meter defective cases.

**General** :-

1. The Inspection should be so arranged that all the sections in the Circle are covered within a year. (Minimum 15 days in a month for field / Section inspections.) The tentative program should be got approved by the Dy. Financial Controller and a copy sent to SE/EDCs concerned for review.
2. The inspection report should be sent to the SE/EDC before $5^{th}$ of every month.

The Superintending Engineers are requested to monitor the works done by the ATO and instruct them to perform well to augment the revenue of Tangedco. Their performances may be reviewed periodically.

We request the Director/Finance may be pleased to consider our suggestions and issue necessary revised instructions after consulting the unions. In the meantime the present instructions issued in CFC Revenue letter dated 12.07.2017 may be kept under abeyance.

Thanking you,

Yours faithfully,
Sd.--------------------
( R.CHANDRASEKARAN)
General Secretary

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
(நிர்வாகக் கிளை)

<u>சுருக்கம்</u>தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் - வாரிசு வேலை - கருணை அடிப்படையில் இறந்த வாரிய பணியாளரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கு பணி நியமனம் வழங்குதல் - அரசு ஆணையை நடைமுறைப்படுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

(நிர்வாகக் கிளை)

நிலை (தலைவர் (ம) மே.இ.) நாள்25.07.2017
த.மி.உ.ம.ப.க. ஹேவிளம்பி வருடம்
செயல்முறை ஆணை எண். 137 ஆடி மாதம் 9ம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2048.

<u>படிக்க</u>

1) அரசாணை (நிலை) எண்.155, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள் 16.07.1993.
2) வாரிய நிலை ஆணை எண்.330 (நிகி), நாள் 02.11.1993
3) அரசாணை (நிலை) எண்.165 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள் 30.08.2010.
4) வாரிய ஆணை (நிலை) எண்.13 (நிகி), நாள் 08.08.2011.
5) சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.14341/2012 தீர்ப்பு நாள் 17.04.2014.
6) அரசு தலைமை வழக்குரைஞரின் கருத்து எண்.82/15 நாள் 08.06.2015.

7) அரசாணை (நிலை) எண்.78 தொழிலாளர் மற்றும் வேலை வாயப்பு (க்யூ1)த் துறை, நாள் 21.04.2017.

<u>செயல்முறைகள்-</u>

அரசாணை நிலை எண்.155, நாள் 16.07.1993-ல் கணவனால் கைவிடப்பட்டு பணியிடை மரணமடைந்த அரசு ஊழியர் குடும்பத்தில் வசித்து வரும் மகளுக்கு அவ்வாறு வசித்து வரும் விதவை மகள் மற்றும் விவாகரத்துப் பெற்ற மகளுக்கும் பணியிடை இறந்த வாரியப்பணியாளரின் வாரிசுதாரர் என்ற முறையில், இறந்த அரசு ஊழியரின் கணவன்/மனைவி அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் பணிநியமனம் வழங்க பரிசீலனை செய்யலாம் என அரசாணை வெளியிடப்பட்டது. மேற்கண்ட அரசாணையை பின்பற்றி தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் நடைமுறைப்படுத்தி வாரிய நிலையாணை எண்.330, நாள் 02.11.1993 மூலம் உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

2) அதனை தொடர்ந்து அரசாணை நிலை எண்.165, நாள் 30.08.2010-ல் கருணை அடிப்படையிலான பணிநியமனங்கள் கோரும் நேர்வுகளில் பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் வாரிசுதாரர் என வரையறுக்கப்பட்டுள்ள நபர்களில் திருமணமாகாத மகள் என்ற நிலையில் பணிநியமனம் கோரி விண்ணப்பம் அளித்து பணிநியமனம் வழங்கப்படுவதற்கு முன்னரே திருமணம் செய்து கொண்டவர்கள் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கு இதர தகுதிகளை நிறைவு செய்யும் பட்சத்தில் அவர்களுக்கும் பணி நியமனம் வழங்கிட வழிவகை செய்யும் வகையில் சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையை பின்பற்றி தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் வாரிய நிலையாணை எண்.13, நாள்.08.08.2011-ன் வாயிலாக உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

3) தமிழக அரசின் அரசாணை (நிலை) எண். 78, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை (ஹ1) நாள் 21.04.2017-ல் வெளியிடப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் நடைமுறைப்படுத்திட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அ | திருமணமான பெண்ணுக்கு வாரிசு அடிப்படையில் பணி வழங்கப்படும் போது அரசாணை (நிலை) எண்.165 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள் 30.08.2010-ல் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும். |
| ஆ | இறந்த வாரிய ஊழியரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களின் கருணை அடிப்படையிலான பணி நியமனக் கோரிக்கை மனு, உரிய மூன்றாண்டு காலத்திற்குள் வழங்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டிருப்பின் அதன் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து நிலுவையில் உள்ள இனங்களையும் அவ்வாறு நிராகரிக்கப்பட்டு, நீதிமன்றம் செல்லாமல் அரசு அலுவலகங்களில் மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் இனங்களையும் கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்குரிய அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்யும் பட்சத்தில் பணி நியமனம் வழங்க பரிசீலனை செய்யலாம். |
| இ | மேலே இனம் (ஆ)-ல் கண்ட இருவகைப்பட்ட தனியர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும் போது இந்நேர்வின் கீழ் பரிசீலனை செய்யப்படும் விண்ணப்பதாரர் எவரும் அவருக்கு மாற்றாக மற்றொருவருக்கு பணி கோரி மாற்று விண்ணப்பங்களை அளிக்க இயலாது. |
| ஈ | மேலே இனம் (ஆ)-வை தவிர வாரிய ஊழியர் இறந்த மூன்றாண்டுகளுக்குள் திருமணமான பெண் வாரிசுதாரர்களால் கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி விண்ணப்பம் அளித்து வாரியத்தால் நிராகரிக்கப்பட்ட இதர நேர்வுகளை, முறையே நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகளுக்குட்பட்டு தனித்தனியாக பரிசீலிக்கலாம். |
| உ | பணியிடை இறந்த வாரிய ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதா என்பதை உறுதி செய்து கொண்டபின், இறந்த வாரிய ஊழியரின் கணவன்/மனைவி ஆகியோர் வாரிசுதாரர்களில் எவரை கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற பரிந்துரை செய்கிறாரோ, அவருக்கே பணிநியமனம் வழங்க பரிசீலிக்கப்பட வேண்டும். |

4) பார்வை 7-ல் குறிப்பிட்டுள்ள அரசாணையினை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் (ம) தமிழ்நாடு மின் வாரிய நிறுவனம் நடைமுறைப்படுத்த இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

(தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களின் ஆணைப்படி)

அ.வெ.ரவி

தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு